1969 ஆகஸ்ட் 18]

கட்டிக் கொடுப்பதற்காக இதன்படி பத்தாயிரம் ரூபாய் வரையில் கொடுக்கலாம். வில்லேஜ் ப்ராஜக்ட் திட்டத்தின்கீழ் மூவாயிரம் ரூபாய் கொடுக்கலாம் என்றும் இருக்கிறது. ஸ்லம் இம்ப்ரூவ்மெண்ட்டுக்காக என்று தனியாக ஸ்கீம் இல்லை.

திரு. கே. விநயகம் : பாயிண்ட் ஆஃப் ஆர்டர் சார், இந்தக் கேள்வியை லோகல் அட்மினிஸ்ட்ரேஷன் அமைச்சர் அவர்களுக்குப் போட்டேன். அந்த அமைச்சர் அவர்கள்தான் பதில் சொல்ல வேண்டும். ஐயா அவர்கள், ஹவுசிங் போர்டுக்கு அமைச்சராக இருப்பதால்தானே என்னவோ இவர் பதில் சொல்கிறார். அதனால்தான் சரியான பதில் வரவில்லை. எந்தக் கேள்வி எந்த அமைச்சருக்குப் போட வேண்டும், யாருக்குப் போடுவது பொருத்தம் என்பதற்காக உங்களுடைய விதி முறைகளைத் திருத்தியமைத்துக்கொள்ள முடியுமா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : தலைவர் அவர்களே, ஒரே விளக்கம். நீங்கள் கேள்வி கேட்டிருப்பதை, எந்த அமைச்சருக்குப் போட்டாலும் அந்தத் துறை சம்பந்தமான அமைச்சரிடமிருந்தே பதில் கிடைக்கும். நீங்கள் கேள்வியில் ரூரல் ஹவுசிங் ஸ்கீமைப் பற்றிக் கேட்டிருக்கிறீர்கள். அது ஸ்டேட் ஹவுசிங் போர்டு கீழ் வருகிறது. ஸ்டேட் ஹவுசிங் போர்ட்டின் கண்ட்ரோலில் அது இருக்கிறபடியால் இந்த அமைச்சர் பதில் கூறினார். மேலும் ரூரல் ஹவுசிங் ஸ்கிமுக்கு இன்ஜினியரிங் டிபார்ட்மெண்ட் தனியாக இருக்கிறது. இன்ஜினியர் இருக்கிறார். எந்தெந்த இடத்தில், எந்தெந்த கிராமத்திற்குப் பணம் கொடுக்கலாம் என்பதைப் பார்வையிட்டு சிபாரிசு செய்வார். அதற்கு எவ்வளவு பணம் கொடுக்கலாம் என்பதை ஏற்பாடு செய்து வருகிறோம். கனம் உறுப்பினர் அவர்கள் தம்முடைய கேள்வியோடு ஸ்லம் பற்றியும் இணைத்திருக்கிறார்கள். ரூரல் ஹவுசிங்கோடு ஸ்லம் பற்றியும் இணைத்திருக்கிறார்கள். உறுப்பினர் அவர்கள் கேள்வியைத் தெளிவாகப் போட்டிருந்தால், பதில் தெளிவாகக் கிடைத்திருக்கும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கனம் உறுப்பினர் அவர்கள் கேள்வியை லோகல் அட்மினிஸ்ட்ரேஷன் மினிஸ்டருக்குப் போடவில்லை, லா மினிஸ்டருக்குத்தான் போட்டிருக்கிறார்கள்.

THIRU K. VINAYAKAM : Law Minister was in charge of housing.

Sadayarkoil near Grand Anicut.

* 20 *Q.*—THIRU K. VINAYAKAM : Will the Hon. the Minister for Religious Endowments be pleased to state :

(*a*) whether a very old neglected Chola temple named Sadayarkoil is situated a mile and a half away from Koviladi near Grand Anicut on the bund of the Coloroon bank;

(*b*) whether poojas are conducted regularly; and

(*c*) whether it is under the control of Hindu Religious Endowments Board ?

மாண்புமிகு திரு. கே. வி. சுப்பையா : (அ) ஆம். கோவிலடிக்குப் பக்கத்திலே திருச்சின்னம் பூண்டியில் கொள்ளிடம் நதிக்குச் சுமார் ஒரு பர்லாங் தூரத்தில் நெல்வயல்களுக்கு நடுவில் இந்தக் கோவில் அமைந்துள்ளது.

(இ) வாரத்திற்கு ஒவ்வொரு வெள்ளிக்கிழமைதோறும் பூஜைகள் நடைபெறுகின்றன.

(உ) இல்லை.

திரு. கே. விநாயகம் : தலைவர் அவர்களே, கோயிலடிக்கு அருகாமையிலே இருக்கிற கோயில் புராதனக் கோயிலாக இருப்பதும், யாரும் அதனைப் பராமரிக்காமல் இருப்பதும் உண்மைதான். இந்தக் கோயிலை ஏன் ஹிந்து ரிலிஜியஸ் எண்டோமென்ட்டின் கீழ்க் கொண்டு வரவில்லை? இந்தக் கோயிலுக்குப் போதிய வருமானம் இல்லையென்றாலும், இது புராதனச் சின்னமாக இருப்பதால், எண்டோமென்ட் இதை எடுத்து, மராமத்து செய்து பொதுமக்களுக்குப் பயன்படும் வகையில் செய்ய அரசாங்கம் முன்வருமா?

மாண்புமிகு திரு. கே. வி. சுப்பையா : தலைவர் அவர்களே, இந்தக் கோயில் எண்டோமென்டின்கீழ் வரவில்லை. இந்தக் கோயிலுக்கு வருட வருமானம் ரூ. 100 தான் வருகிறது. மேலும் இந்தக் கோயில் புராதனக் கோயிலாக இருப்பதால் ஆர்க்கியாலஜி டிபார்ட்மென்ட் எடுத்துக்கொள்ள முடியுமா என்பதுபற்றிக் கடிதம் போக்குவரத்துகள் நடந்து வருகின்றன. அவர்கள் அதை எடுத்துக் கொள்ளவில்லை என்பதும் கடிதப் போக்குவரத்து முடிந்த பிறகு தான் தெரியும்.

திரு. கே. விநாயகம் : இந்தக் கோயில் சோழர்களால் கட்டப்பட்டது என்று சொல்லப்படுகிறதே, அது எந்த ஆண்டில் கட்டப்பட்டது என்று அரசாங்கத்திற்குத் தெரியுமா?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இந்தக் கோயில் சோழர்களால் கட்டப்பட்டது என்று திரு. விநாயகம் தான் சொல்கிறார். அவரே எந்த ஆண்டு கட்டப்பட்டது என்று சொல்ல முடியும். (சிரிப்பு).

மாண்புமிகு திரு. கே. வி. சுப்பையா : அதுசம்பந்தமான தகவல் என்னிடம் இல்லை. தனிக் கேள்வி போடவேண்டும்.

Central taxes

***11** *Q.*—THIRU K. VINAYAKAM: Will the Hon. the Minister for Finance be pleased to state:

(*a*) whether the State Government has made a representation to the Central Government regarding the fixation of the State's share in the Central taxes during the Fourth Plan period; and

(*b*) what is the reaction of the Central Government?